ஈ. கே. எம். அப்துல் கனி மதரஸா இஸ்லாமியா உயர்நிலைப்பள்ளி,ஈரோடு

## முதல் இடைப்பருவத் தேர்வு

மொழிப்பாடம்– தமிழ்

நேரம் :3.00 மணி மதிப்பெண்: 100

பகுதி–1 (மதிப்பெண்கள் :15)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 15 ×1=15

1. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?

அ.சிங்கப்பூர் ஆ.மலேசியா இ.இந்தியா ஈ.கனடா

2. தமிழில் வசன கவிதையை அறிமுகப்படுத்தியவர் யார்?

அ.பாரதியார் ஆ.வல்லிக்கண்ணன் இ.பிச்சமூர்த்தி ஈ.பாரதிதாசன்

3.' பெரிய மீசை சிரித்தார்' இதில் 'பெரிய மீசை' என்னும் சொல்லுக்கான தொகையின் வகை எது?

அ.பண்புத்தொகை ஆ.உவமைத்தொகை இ.அன்மொழித் தொகை ஈ.உம்மைத் தொகை

4. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி ' அடியில் பாக்கம் என்பது----

அ.புத்தூர் ஆ.மூதூர் இ.பேரூர் ஈ.சிற்றூர்

5.உலக காற்று நாள்----

அ.ஜீன்–15 ஆ.ஜீன்–18 இ.ஜீன்–1 ஈ.ஜீன்–5

6.கஜா புயலின் பெயரைத் தந்த நாடு எது?

அ.இலங்கை ஆ.தாய்லாந்து இ.இந்தியா ஈ.பாகிஸ்தான்

7. "தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே

வேளாண்மை என்னும் செருக்கு" –இக்குறட்பாவில் பயின்று வரும் அணி யாது?

அ.வஞ்சப்புகழ்ச்சி அணி ஆ.உவமை அணி

இ. சொற்பொருள் பின்வருநிலையணி ஈ.ஏகதேச உருவக அணி

8. திருக்குறளில் அமைந்த பாவினம்------

அ.அகவற்பா ஆ.வெண்பா இ.வஞ்சிப்பா ஈ.கலிப்பா

9. மகுளி என்னும் வட்டார வழக்குச் சொல்லின் பொருள்

அ.பாத்தி ஆ.கவனமாக இ.சலிப்பு ஈ.சோற்றுக் கஞ்சி

10.வேர்கடலை , மிளாய் விதை , மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை----

அ.குலை வகை ஆ.மணிவகை

இ.கொழுந்து வகை ஈ.இலைவகை

11.ஹிப்பாலஸ் --------அறிஞர்.

அ.கிரேக்க ஆ.இந்திய இ.மலேசிய ஈ.சீன

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

"அன்று அவண் அசைஇ அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி,
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரம் எனினே,"

12. இப்பாடலின் ஆசிரியர்----

அ.பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

ஆ.அதிவீரராம பாண்டியர் இ.ராஜநாராயணன்

ஈ.சீவலமாறன்

13. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்----

அ.காசிக்காண்டம் ஆ.மலைபடுகடாம்இ.பரிபாடல் ஈ.நற்றிணை

14. ஆரி என்பதன் பொருள்-----

அ.சுற்றம் ஆ. அருமை இ.கூத்தர் ஈ.தினை

15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிமோனைச்சொற்களை குறிப்பிடுக.

அ.அன்று– கன்று ஆ.அலங்கு –சிலம்பு
இ.அன்று – அலங்கு ஈ.அன்று –அவன

பகுதி– 2 (மதிப்பெண்– 18)

பிரிவு– 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்க. 4 × 2 = 8

(21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)

16.விடைகளுக்கு ஏற்ற வினா அமைக்க.

அ.கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு.
ஆ.சாகும்போதும் தமிழ்ப் படித்துச் சாக வேண்டும்.

17.வாழையிழை விருந்து விழா ஆண்டுதோறும் எங்கு நடைபெறுகின்றது?

18.தற்கால உரைநடையில் சிலேடை அமைவதற்குச் சான்று ஒன்று எழுதுக.

19." நச்சப்படாதவன் செல்வம் "இத்தொடரின் பொருள் கூறுக.

20. குறிப்பு வரைக: " கரிசல் இலக்கியம்"

21.” தரும்” என முடியும் திருக்குறள். எழுதுக

பிரிவு –2

எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடை அளிக்க. 5 × 2=10

22. **கலையரசி**, வீட்டில் செய்த **கண்மை** இட்டுக் கொண்டார். – அடிக்கோடிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக.

23.வினையடிகளை இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்கு. “1.சிரி 2.படி “

24.சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க. “ 1.முத்துப்பல் 2.கீரி பாம்பு”

25. கலைச்சொற்கள் தருக. **Monolingual , Tempest**

26. கீழ் வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக. “காட்டில் குறிஞ்சிப்பூ காலையில் பூத்தது.”

27. பொருத்தமான நிறுத்தக்குறிகள் இடுக

இணையத்தமிழனா வியப்பு உங்கள் வருகையை என் தோழர் குன்றூர்க் கிழாரிடம் கூறவேண்டும் அவர் உங்களையும் உங்கள் ஊர்தியையும் குறித்து ஓர் ஆசிரியப்பா இயற்றிவிடுவார்

28. பகுபத உறுப்பிலக்கணம் தருக. “பொறித்த”

பகுதி – 3 (மதிப்பெண்கள்– 18)

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 × 3 = 6

29.வாழை இலையில் விருந்து படைப்பது ஏன்?

30. சோலைக்காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல உரையாடல் ஒன்று அமைக்க.

31.உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

வடஇந்தியப் பெருங்கடல்களில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை 2000ஆம் ஆண்டில் தொடங்கியது.புதுதில்லியில் உள்ள உலக வானிலை அமைப்பின் மண்டலச் சிறப்பு வானிலை ஆய்வு மையம் 2004 செப்டம்பரில் இருந்து புயல்களுக்குப் பெயர் வைக்க 64 பெயர்களைப் பட்டியலிட்டுள்ளது.

அ.புயல்களுக்குப் பெயர் வைக்கும் நடைமுறை வந்த ஆண்டு யாது?

ஆ.புதுதில்லியில் உள்ள அமைப்பு யாது?

இ.இவ்வுரை பத்திக்கு பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

பிரிவு–2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. (34ஆவது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) 2 × 3 = 6

32.” நன்னர் நன்மொழி கேட்டனம்” – இடம் சுட்டி பொருள் தருக.

33. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலை மலைபடுகடாம் எவ்வாறு காட்டுகிறது?

34 அடிபிறழாமல் எழுதுக.

“சிறுதாம்பு” எனத்தொடங்கும் முல்லைப்பாட்டு பாடல்.

அல்லது

“விருந்தினனாக” எனத் தொடங்கும் காசிக்காண்டப் பாடல்.

பிரிவு– 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 × 3 = 6

35.கூட்டுநிலைப் பெயடிரச்சங்கள் எவ்வாறு உருவாகின்றன? சான்று தருக.

36.”நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்

நாள்தொறும் நாடு கெடும்.” குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

37.உவமை அணியை விளக்குக.

பகுதி– 4 (மதிப்பெண் –25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 × 5 = 25

38.அ.முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக. (அல்லது)

ஆ.தமிழழகனார் குறிப்பினையும் அவரின் இரட்டுறமொழிதல் நயத்தையும் குறிப்பிடுக.

39.அ. தரமற்ற உணவினை வழங்கிய உணவு விடுதி ஒன்றின் மீது புகார் தெரிவித்து உரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ.மாநில அளவில் பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற தோழனுக்குக் கடிதம் வரைக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயம் ஒரு ஐந்து தொடர்களில் எழுதுக.



www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. மேல்நிலைப் பள்ளியில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.(பெயர் : அஅஅ ஊர் :ஆஆஆ )

42.அ.பழமொழிகளை நிறைவு செய்க.

1.உப்பிலாப் ------------

2.சுத்தம் -------------

3.விருந்தும் -----------

4.அளவுக்கு ----------

5.சிறுதுளி ----------- (அல்லது )

ஆ.மொழிபெயர்க்க.

The golden sun gets up early in the morning and stars it bright rays to fade away the dark. The milky clouds start their bantering wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

பகுதி – 5 (மதிப்பெண்– 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடைஅளிக்க.

3× 8 = 24

43. அ. இரா.இளங்குமரனார் பற்றி குறிப்பிடுக.

அல்லது

ஆ. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44.அ. அன்னமையா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதை பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ.தோணி வருகிறது என்னும் கதையைச் சுருக்கி எழுதுக.

45. தமிழின் சிறப்பு பற்றிக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ.சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிக் கட்டுரை எழுதுக.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com